தரமுயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஒரு பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக, உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளியாக, தரமுயர்த்துவதற்கு, அதற்கு இருக்கக்கூடிய நிபந்தனைகளை உரிய வகையிலே அவர்கள் பூர்த்தி செய்து, முறையான முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்கும். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தக்கூடிய காரணங்கள் உள்ளன. தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டிலே, ஓரளவிற்கு பல இடங்களிலே, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பிலே பல பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதிலே, ஒரு குறிப்பிட்ட இலக்கை நாம் அடைந்திருக்கிறோம். இதனுடைய அடுத்த கட்டமாக Universalisation of Secondary Education என்ற அடுத்த கட்டத்திற்கு நாம் போகின்றபோது, தமிழகத்திலே மிகப் பெரும்பான்மையான பள்ளிகளை நாம் தரமுயர்த்திட முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அப்போது நிச்சயமாக பரிசீலனை செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

119—

சத்யமேவ ஜயதே
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சமூக நல அலுவலகம்

***484—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியே மாவட்ட சமூக நலத் துறை அலுவலகம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2006 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியே மாவட்ட சமூக நலத் துறை அலுவலகம் செயல்படுத்த, அரசு ஆணை எண் 53—ல் மே 26 ஆம் தேதியன்றே, ஏற்கெனவே, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாணையின் அடிப்படையில் அவ்வலுவலகம் ஜூலை 1—ம் தேதி முதல் தனியே செயல்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட சமூக நல அலுவலகம் தவிர, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி அலுவலகமும், மாவட்ட ஊனமுற்றோர் மறு வாழ்வு அலுவலகமும் புதிதாகத் தொடங்கிச் செயல்பட, தனித் தனியே ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வலுவலகங்களில் பணியாளர்கள் பணி புரிவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வலுவலகம் செயல்பட அதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு உறுப்பினருக்கு உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியாக சமூக நலத் துறை அலுவலகம் தந்திருப்பதாக நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அறிவிப்புக்கு நன்றி. இந்தக் கேள்வி, இரண்டு மாதங்களுக்கு முன்பாகக் கொடுக்கப்பட்ட கேள்வி. ஆகவே, அந்த அறிவிப்புக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக, நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

118—

சிட்டா நூல்

***785—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், சென்னிமலைப் பகுதியில் சிட்டா நூலுக்கு இரண்டு விழுக்காடு வரி நீக்கம் செய்யப்படுமா?

TRUTH ALONE TRIUMPHS